# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 16.07.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வுடைய வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இரண்டாவது தோற்றம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் நிறைவேறியது. அன்னாரை இறைவன் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், மஹ்தியாகவும், உம்மத்தி நபியாகவும் ஆக்கி அனுப்பினான். அவர்கள் தூய உள்ளமும், நல்லியல்பும் கொண்ட மக்களை இணைத்து ஒரு ஜமாஅத்தை உருவாக்கினார்கள். அம்மக்கள் நன்மைகளில் முன்னேறியவாறு தமக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டே சென்றனர். இவ்வாறு அவர்கள் அவ்வலீன்(முன்னவர்)களுடன் இணைந்து கொண்டனர்.

இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இணைந்திருந்த அந்த மக்களின் சில அறிவிப்புகளை எடுத்து வைப்பேன். அம்மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இணைந்து அவர்களது கருணையிலிருந்து பயன் பெற்றனர். இந்த அறிவிப்புகளிலிருந்து உண்மையைத் தேடுபவர்களின் நல்லியல்புகள் பிரகாசிக்கின்றன. அதே வேளையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அன்பு, தூய்மையாக்கும் ஆற்றலும் கூட வெளிப்படுகின்றன. அவர்கள் ஒரு தனித்தன்மை வாய்ந்த மனிதனாக அந்த அறிவிப்புகளிலிருந்து தெரிய வருகிறார்கள். மேலும் இதனை படிக்கும் போது இந்த சான்றோர்களுக்காக நம்மிடமிருந்து துஆவும் வெளிப்படுகின்றன. அவர்கள் தமது அறிவிப்புகளை நம்மிடம் கொண்டு சேர்த்து, நம்மையே ஆய்வு செய்வதற்கு கவனமூட்டியுள்ளார்கள். அத்துடன் இந்த உண்மை பேரன்பர் தமது ஜமாஅத்தைக் குறித்து கொண்டிருந்த உளவிருப்பமும் தெரிய வருகின்றன.

முதல் அறிவிப்பு **ஹஸ்ரத் மியான் பரிஸுத்தீன் சாஹிப் ஸியால்கோட்டி** உடையது. இவர் 1892 -ல் பைஅத் செய்தார்கள்.

அன்னார் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஸியால்கோட் லெக்சர் மீர் ஹிஸாமுத்தீன் சாஹிபுடைய வீட்டின் மாடியிலிருந்து எழுதினார்கள். நான்கு சுவர்களிலும் காகிதங்கள் வைப்பதற்கான இடங்கள் இருந்தன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக எழுதிக் கொண்டிருந்தார்கள். இடையிடையே ஸஜ்தாவும் செய்தார்கள். அது அஸர் நேரமாக இருந்தது. இவை அனைத்தையும் எமது இடத்தின் மாடியிலிருந்து பார்த்து வந்தோம். இன்னும் பலர் இதனை காண்பதற்காக ஒன்றுகூடி விட்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இருந்த இடத்தை விட நாங்கள் இருந்த இடம் சற்று உயரமாகவும் அதற்கு அருகிலும் இருந்தது. அங்குள்ள எல்லா விஷயங்களும் தென்பட்டன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதியதும், எழுத்தாளராக இருந்த சாஹுவாலைச் சேர்ந்த சிராஜுத்தீன் சாஹிப் அவர்களிடம் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மக்களுக்கு சொற்பொழிவு ஆற்றுவதற்காக சென்ற போது, வழியில் இரண்டு வாசல்கள் இருந்தன. அது ஜண்டாவாலா என்ற பகுதிக்கு செல்லக்கூடியது. அங்கு ஹாபிஸ் சுல்தான் அஹ்மத் என்பவர் குழந்தைகளுக்கு ஓதிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் திருக்குர்ஆன் மனனம் செய்தவராகவும் இருந்தார். அவரது செயலை சற்று பாருங்கள். அம்மனிதர் குழந்தைகளுக்கு விடுமுறை கொடுத்து விட்டு அவர்களின் பையில் சாம்பலை நிரப்பினார். மிர்ஸா சாஹிப் இந்த வழியாக கடந்து சென்றால் நீங்கள் எல்லாவற்றையும் அவர் மீது கொட்ட வேண்டும் என்று கூறினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூடப்பட்ட வண்டியில் சென்றதால் எந்த அசம்பாவிதத்திற்கும் உள்ளாகாமல் நல்லபடியாக அந்த இடத்தை விட்டு கடந்து சென்று விட்டார்கள். பாதையின் இருபுறமும் பீர் ஜமாத் அலி ஷா உடைய சீடர்கள் நின்றனர். மக்களை சொற்பொழிவு நடைபெறும் இடத்திற்கு செல்லவிடாமல் தடுத்தனர். அவர்களுள் மவ்லவி இப்ராஹீம் என்பவரும் ஒருவராவார். பீர் ஜமாத்

அலி ஷா என்பவர் பழைய ஆடு, மாடுகளை அறுக்கும் இடத்தின் அருகில் நின்றனார். இப்போது அங்கு பத்ஹே முஹம்மத் உடைய கட்டடம் உருவாக்கப்பட்டுள்ளது. ஹாபிஸ் ஸஃபர் ஷேக் பாஸ்கான் என்பவர் ஜமாத் அலி ஷாவின் வலதுபுறம் நின்றார். இந்த முல்லாக்கள் அனைவரும் மக்களை அரங்கிற்குள் செல்லவிடாமல் தடுத்தனர். சொற்பொழிவு ஆரம்பமாகி, மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் சொற்பொழிவை வாசிக்க ஆரம்பித்ததும், சொற்பொழிவை கேட்கக் கூடாது என்பதற்காக முஸம்மா அஹ்மத் தின் ஸலேரியே என்ற ஒரு மனிதர் உள்ளே வந்து சிலரை அழைத்துக் கொண்டு சென்றார். வழியில் ஜமாத் அலி ஷா நின்ற இடத்தில் மக்களை விட்டு விட்டு சென்றார். ஹுஸுர் திரும்பி வரும் போது நானும் எனது சச்சா மீரா பக்ஷ் சாஹிப், சேக் மவ்லா பக்ஷ் சாஹிப், மலக் ஹயாத் முஹம்மத் சாஹிப், சக்னாவின் போலீஸ் இன்ஸ்பெக்டர், செய்யது அமீர் அலி சாஹிப், சப் இன்ஸ்பெக்டர் மீரான் பக்ஷ் சாஹிப் போன்றோர் வஸீராபாத் வரை சென்றோம். அங்கு ஹுஸுருடைய வண்டி ஓரிடத்தை கடந்து சென்ற போது முன்னால் எதிரிகள் சூழ்ந்து நிற்கிறார்கள். கூச்சலிட்டவாறு வண்டியின் மீது கல்லை எறிந்தனர். இதுதான் இவர்களது நிலையாக இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏசக்கூடிய இம்மக்கள் நிர்வாணமாக நிற்கின்றனர். இந்த விஷமிகள் மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் ஜெஹல்மியை காயப்படுத்தி விட்டனர் என்பது நாங்கள் திரும்பி வரும் போதுதான் தெரிய வந்தது. எனது சகோதரர் பாபு அஸீஸ் தீன் சாஹிப் உடைய உதடு கல் பட்டதில் காயமடைந்து விட்டது. மவ்லவி மவ்லா பக்ஷ் சாஹிபுடைய வீட்டின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. அங்கிருந்த பூச்செடிகளை நாசமாக்கினர். நான் ஹுஸுருடன், ஜெஹ்லம் சென்றேன். அங்கும் வழியில் நல்ல கூட்டம் இருந்தது. இரண்டு ஐரோப்பிய பெண்கள் அங்கு எதற்காக இந்தக் கூட்டம்? என்று கேட்க நமது நண்பர், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று கூறினார். உடனே, சற்று விடுங்கள்; நான் அவரை புகைப்படம் எடுக்க வேண்டும் என்று அப்பெண் கூறினார். இவ்வாறு மக்கள் சற்று விலக புகைப்படம் எடுத்தனர். மறுநாள் காலையில் கச்சேரி முழுவதும் விடுமுறை ஆகி விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செல்ல வேண்டிய மாஜிஸ்ரேட் திறந்திருந்தது. கச்சேரியின் வளாகத்தில் ஒரு பாய் விரிக்கப்பட்டிருந்தது. ஒரு நாற்காலியும் போடப்பட்டிருந்தது. ஹுஸுர் அந்த நாற்காலியில் அமர்ந்தார்கள். எனக்கு 20 அடி தூரத்தில் மவ்லவி இப்ராஹீமுடன் மக்கள் கூட்டம் நின்றிருந்தது.

ஹுஸுர் நீதிமன்றத்தில் கூறினார்கள்: நான் கூறியதற்கேற்ப மக்கள் என்னை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். நான் இறைவன் புறமிருந்து வந்துள்ளேன். நான் என் தரப்பிலிருந்து இதனை இட்டுக்கட்டிக் கூறியிருந்தால், எனக்கு அதற்கு தண்டனை கிடைக்கும். மக்கள் என்னை ஏற்றுக் கொண்டதற்கு தண்டனை கிடைக்காது. ஆனால், நான் இறைவன் புறமிருந்து வந்திருந்தால் ஏற்றுக் கொள்ளாததற்கு கண்டிப்பாக தண்டனை கிடைக்கும். இது திருக்குர்ஆனின் கருத்தாகும்.

**அவர் பொய்யராக இருந்தால் அவரது பொய்யினால் விளையும் தீங்கு அவரையே சாரும். ஆனால் அவர் உண்மையாளராயின், அவர் உங்களுக்கு முன்னறிவித்தவைகளுள் சில தண்டனைகள் உங்களுக்கு நேரும்.(40:29)**

அதாவது அவரது எச்சரிக்கை விடுக்கும் முன்னறிவிப்புகளை நீங்கள் சந்திக்க வேண்டியதாகி விடும். இன்று இந்த முஸ்லிம்கள் இதனை ஆய்வு செய்ய வேண்டும். பிறகு இப்ராஹீமின் முன்னால் ஒரு மெம்பரில் ஒரு புத்தகம் இருந்தது. அவர் அதனை எடுத்து வானத்தை நோக்கி இப்படித்தான் மஸீஹ் வானத்திற்கு போய் விட்டார் என்று கூறினார். அந்த கூட்டத்தில் ஒரு யாசிப்பவர் இருந்தார். அந்த யாசிப்பவரின் அறிவை பாருங்கள்! அவரது பெயர் ஸைன் ஆஸாத். பழைய குர்தா அணிந்திருந்தார். உரத்த குரலில், ஏ பாபா! ஏன் பொய் சொல்கிறீர்? மக்களை ஏமாற்றுகிறீர்கள். திருக்குர்ஆனிலிருந்து **எல்லா உயிர்களும் மரணத்தை சுவைத்தே தீரும் (3:186)** என்று வசனத்தை வெட்டி விடுங்கள். இவ்வாறு மூன்று முறை உரத்த குரலில் கூறினார். இவ்வாறு கத்தியதில் அந்த யாசிப்பவருக்கு வியர்த்துப் போய் விட்டது. மேலும் அந்த யாசிப்பவர், நான் மிர்ஸா சாஹிபுடைய முரீது அல்லன். ஆனால் உண்மையை மறைக்க முடியாது என்றார். அந்த யாசிப்பவருக்குப் புரிந்த விஷயம் மவ்லவிகளுக்கு புரியவில்லை.

ஹுஸுா் உறங்கிக் கொண்டிருந்த அறைக்கு அருகில் நானும் மவ்லவி தாஜுத்தீன் சாஹிபும் உறங்கிக் கொண்டிருந்தோம். மவ்லவி தாஜுத்தீன் சாஹிப் நோயுற்று இருந்தார். இரவில் இருமிக் கொண்டிருந்தார். யார் நோயுற்றிருந்தார்? இருமிக் கொண்டிருந்தது யார் எனறு ஹுஸுா் கேட்டார்கள். ஹுஸுா் (அலை) அவர்கள் அருகில் அமர்ந்திருக்கும் போது சாஹிப்ஸாதா அப்துல் லத்தீப் சாஹிப் கூறினார்கள். ஹுஸுா், எனது இரத்தம் உடலிலிருந்து சொட்டுகிறது. இது காபூலில் பாசன நீராக வேலை செய்யும் என்பதை நான் பார்க்கிறேன்!

அடுத்த அறிவிப்பு **ஹஸ்ரத் உமர் தின் ஹிஜாம் (ரலி)** அவர்களுடையது. இவர் குஜராத்தைச் சார்ந்தவர். 1899 -ல் எழுத்து மூலம் பைஅத் செய்தவர். 1900 -ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கையில் பைஅத் செய்தார். இவர் கூறுகிறார்: நீங்கள் மிர்ஸாயி ஆகப் போகிறீர்கள் என்று அஹ்மதியல்லாதவர்கள் கூறுவார்கள். நான் இந்த பள்ளிவாயிலிருக்கு வரும்போது மக்கள் தொழுது கொண்டும், குர்ஆன் ஓதிக் கொண்டும் இருப்பதை பார்க்கும் போது எனக்கு புரியவில்லை. நான் இறைவனிடம் துஆ கேட்டேன். அல்லாஹ்வே! இவர் உன் புறமிருந்து வந்தவர் எனில், அவருக்கு உனது தோற்றம் கிடைத்திருக்கும் எனில் நான் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும்; பின்தங்கி விடக்கூடாது. நவூதுபில்லாஹ். அவர் உண்மையாளர் இல்லையெனில் உனது சாபமும், உனது ரஸுலின் சாபமும், முழு உலகின் சாபமும் அவர் மீது உண்டாகட்டுமாக! ஏன் அவர் பொய் வாதம் செய்து மக்களுக்கு தவறான வழி காட்ட வேண்டும்?

அதே இரவில் விடியற்காலையில், நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கையில் ஒரு பறவை நிற்பதையும், அவர்களின் அழகிய தோற்றத்தையும் கண்டேன். தாடியில் மருதாணி போடப்பட்டிருக்கிறது. அவர்களது பார்வை கீழ்நோக்கி இருக்கிறது. அவர்களைப் பார்த்து எனது உள்ளம் மகிழ்ச்சி அடைகிறது. இவர் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் ஆவார்கன் என்று நான் நினைக்கிறேன். நான் இதுவரை அத்தகைய ஒரு மனிதரை கண்டதில்லை. நான் இரவில் துஆ செய்து விட்டு தூங்கினேன். அதன் விளைவாக இப்படி கனவு கண்டுள்ளேன் என்பது தெரிய வந்தது. இவ்வாறு அல்லாஹ் எனது துஆவை நிறைவேற்றினான்.

இங்கு (காதியானுக்கு) நான் 1900 -ல் வந்தேன். மஸ்ஜித் அக்ஸாவில் உட்கார்ந்து நான் துஆ செய்தேன். அல்லாஹ்வே! ஆப்பிரிக்காவிலிருந்து வந்த போது எனது கனவில் கண்ட மனிதர் இவர்தான் எனில், இவரையே எனது கனவில் காட்டியிருந்தாய் எனில் நான் பைஅத் செய்வேன். அவ்வாறு இல்லையெனில், அவருடன் சேர்ந்து தொழவும் மாட்டேன்; பைஅத் செய்யவும் மாட்டேன்; இங்கு உணவு உண்ணவும் மாட்டேன்; உடனே திரும்பிப் போய் விடுவேன் என்று நான் துஆ செய்து கொண்டிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் நான் ஆப்பிரிக்காவிலிருந்த போது கனவில் கண்ட அதே மனிதர் தான் என்று புரிந்து கொண்டேன். ஹுஹுா் (அலை) அவர்களைக் கண்டறிந்து பைஅத் செய்த பிறகு ஒரு வாரத்தில் ஊர் திரும்புவதற்காக அவர்களிடம் அனுமதி கேட்டேன். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மையைப் புரிந்து கொள்ள இங்கு 15 நாட்களாவது தங்குங்கள் என்று கூறினார்கள். நான், ஹுஸுா் எனக்காக துஆ செய்யுங்கள். நான் எப்போதுமே உங்களுக்கு சேவை செய்ய இங்கேயே இருப்பதற்கு அல்லாஹ் எனக்கு வாய்ப்பு தரட்டும் என்றேன். பிறகு ஹுஸுா் கூறினார்கள். உங்களுக்கு இங்கு வருவதற்கு நேரம் கிடைக்கவில்லை எனில் கண்டிப்பாக எனக்கு கடிதம் எழுதிக் கொண்டிருங்கள். மேலும் ஹுஸுா் அவர்கள், எனது கடிதங்களுக்கு பதிலும் எழுதினார்கள். அக்கடிதம் என்னிடம் உள்ளது.

**ஹஸ்ரத் சூஃபி நபி பக்ஷ் சாஹிப்.** இவர் அப்துஸ் ஸமது சாஹிபின் மகன் ஆவார். ராவல்பிண்டி குத்புத்தீன் முஹல்லாவில் இருந்தார். தற்போது காதியானின் தாருல் பரகாத்தில் வசிக்கிறார். இவர் அக்காலத்தின் நிலைமையைக் குறித்து எழுதுகிறார். ஹஸ்ரத் சூஃபி நபி பக்ஷ் சாஹிப் 27 டிசம்பர் 1891 -ல் பைஅத் செய்தார். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை 1886 -ல் முதன் முதலில் பார்த்தார். சம்பவம் பின்னால் வருகிறது. இந்த எளியவனுக்கு 1886-ல் காதியானுக்கு வரக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. வருவதற்கான காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு பிரசுரம் வெளியிட்டார்கள். அதில் தமக்கு ஒரு மகன் வழங்கப்படவிருக்கிறான் என்று கூறியிருந்தார்கள். அவர் மூலம்

சமூகத்திற்கு பரக்கத் ஏற்படக் காரணமாகும் என்று எழுதியிருந்தார்கள். உடனே பெஷாவரைச் சேர்ந்த லேக்ராம் என்பவன் அதற்கு எதிராக ஒரு பிரசுரம் வெளியிட்டான். அதனை தொடர்ந்து எனக்கு காதியான் வரக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. சில காலம் காதியானில் தங்கிய போது, பத்ஹே இஸ்லாம், தவ்ஸீஹே மராம், இஸாலே அவ்ஹாம் என்ற மூன்று நூல்களை ஒன்றன்பின் ஒன்றாக வெளியிட்டார்கள். அதில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் என்று நிரூபித்தார்கள். அவர் மீண்டும் உலகில் வரமாட்டார். மேலும் மஸீஹிப்னு மர்யம் –ன் இறங்குதல் என்பது உண்மையான பொருளில் எனக்குப் பொருந்தும். நானே அதனை உண்மைப்படுத்த வந்துள்ளேன். இதுவே உலகில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. மவ்லவிகள் குஃப்ர் ஃபத்வா வெளியிட்டனர்.

பிறகு ஆஸ்மானி ஃபைஸலா என்ற இன்னொரு நூலை வெளியிட்டார்கள். அதற்கு பிறகு முதல் ஜல்ஸா காதியானில் நடந்தது. ஏறத்தாழ 80 பேர் கலந்து கொண்டார்கள். திருக்குர்ஆன் அடிப்படையில் முஃமின் யார்? காஃபிர் யார் என்று சோதித்துப் பார்க்க வேண்டும் என்பது ஹுஸுருடைய விருப்பமாக இருந்தது. ஜல்ஸாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று எனக்கும் அழைப்பு வந்தது. நான் அப்போது அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம் லாஹூர் புத்தக நிலையத்தின் செயலராக இருந்தேன். மார்க்கப் பணி என்ற முறையில் எனது பணிகளுடன் சேர்த்து அதனையும் செய்து வந்தேன். நான் காதியான் வந்தடைந்த போது என்னுடன் அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாமின் நிறைய தொண்டர்கள் வந்திருந்தனர். இந்த ஜல்ஸாவில் ஆஸ்மானி ஃபைஸலா படித்துக் காட்டப்பட்டது. எனது நினைவின்படி மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அந்த நூலைப் படித்துக் காட்டினார்கள். இன்று மஸ்ஜித் அக்ஸா என்ற பெயரில் பிரபல்யமாக இருக்கின்ற இடத்தில் ஜல்ஸா நடந்தது. கடைசியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். ஹுஸுர் (அலை) அவர்கள் மஸ்ஜதிற்குள் வந்ததும் எனது பார்வை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அருளுக்குரிய முகத்தின் மீது பட்டது. உடனே புரிந்து கொண்டேன். மின்னலைப் போன்று எனது உள்ளத்தில் ஓர் அலை உருவானது. நான் மாணவப் பருவமான 1882 –ல் கனவு கண்டேன். அக்கனவில் ஹுஸுர் எந்த ஆடையை அணிந்திருந்தார்களோ அதே ஆடையைத்தான் இன்று ஹுஸுர் அணிந்து வரக் கண்டேன். ஜல்ஸா முடிந்ததும் ஹுஸுர் வாசலில் நின்றார்கள். ஒவ்வொருவரும் அவர்களுடன் கை குலுக்கினர். எல்லாருக்கும் கடைசியில் நான் கை குலுக்கினேன். ஏனெனில் ஹுஸுருடன் சில விஷயங்களைப் பேசுவது எனது நோக்கமாக இருந்தது. நான் அவர்களிடம், நான் ஏற்கனவே ஒருவரின் கையில் பைஅத் செய்துள்ளேன் என்று கூறினேன். ஹுஸுர் கூறினார்கள். நீங்கள் பைஅத் செய்த அம்மனிதர் நல்லவர் எனில் உங்கள் பைஅத் நூருன் அலா நூர் – ஒளிக்கு மேல் ஒளியாக இருக்கும். அவர் உண்மையாளர் இல்லையெனில் அந்த பைஅத் ரத்தாகி விடும். நமது பைஅத் மட்டுமே இருக்கும். நான், ஹுஸுர் தங்களிடம் பைஅத் செய்ய விரும்புகிறேன் என்றேன். ஹுஸுர், நானே உங்களை கூப்பிடுவேன் என்றார்கள். சிறிது நேரம் கழித்து ஹுஸுருடைய பணியார் ஹாமித் அலி சாஹிப் என்னை கூப்பிட்டுச் சென்றார். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கையில் பைஅத் செய்தேன். அல்ஹம்துலில்லாஹ் மின் ஸாலிக்.

இன்னொரு அறிவிப்பு **நிஸாமுத்தீன் ஜெஹ்லம் மாஸ்டர்** உடையது. இவர் மல்லாஹான் முஹல்லாவைச் சேர்ந்தவர். இவர் 1902 –ல் பைஅத் செய்தார். அவர் கூறுகிறார்: இந்த அருள் எனக்கு கிடைத்தது கண்டு வியந்து போகிறேன். அல்லாஹ்வின் அருளால் மட்டுமே எனக்கு இது கிடைத்தது. பல வழிபாடுகள் என்னிடம் இருந்தன நான் அஹ்மதிய்யத்தின் அருகில் கூட வந்திருக்க முடியாது. ஆனால் என்னை படைத்தவன் என் மீது பேரருள் புரிந்தான். வருடம் முழுக்க நடந்தாலும் என்னால் முடிக்க முடியாத பயணத்தை இறைவன் தனது அருளால் ஒரே இரவில் முடித்து தந்தான். அதுவும் இவ்வாறு நான் எமது மவ்லவிகளைப் போன்று அஹ்மதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினால் எங்களுக்கு ஓர் உறுதி ஏற்பட்டிருக்கும். நமது மவ்லவி தான் மார்க்கத்தின் தூணாவும், நம்மை ஷிர்க், பித்அத்திலிருந்து காப்பாற்றுவதற்காக அல்லாஹ்வுக்காக தொடர்ந்து முயன்று கொண்டிருக்கிறார் என்றும் நினைத்திருப்பேன். அஹ்லே ஹதீஸ்கள் தம்மை எப்போதும் பொய், ஹராம்களிலிருந்து விலகியிருப்பவர்களாக கருதிக் கொண்டிருந்தனர். ஒருமுறை மார்ச் மாதம் அநேகமாக 1902 ஆம் ஆண்டு நாங்கள் சில அஹ்லே ஹதீஸ்களைச் சேர்ந்தவர்கள் ஜெஹ்லமிலிருந்து லாஹூர் வந்தோம். அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாமின்

ஜல்ஸாவைப் பார்ப்பதற்காக வந்தோம். நடந்தே வந்தோம். அந்த ஜல்ஸா ஒவ்வொரு வருடமும் நடக்கும். ஜல்ஸா கூடாரத்திற்கு வெளியில் சுவருக்கருகில் ஒரு மவ்லவி நின்று பேசிக் கொண்டிருந்தார். ஒரு கையில் திருக்குர்ஆனும் இன்னொரு கையில் சிறு சிறு பிரசுரங்களும் இருந்தன. மிர்ஸா நவூதுபில்லாஹ் குஷ்டராகி விட்டார். நபிமார்களை இழிவுபடுத்தியதால் அவருக்கு அந்த நிலை ஏற்பட்டு விட்டது. அத்துடன் தன்னை ஈஸா என்று வேறு கூறிவந்தார். மேற்கண்ட வாசகத்தை அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறி வந்தார். அதனைக் கேட்டு நாங்கள் வியந்து போனோம். எமது உள்ளத்தில் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. இப்படியும் ஒரு மனிதர் சொல்லத் துணிவாரா? அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து பொய் சொல்ல முடியுமா? குர்ஆனை வைத்துக் கொண்டு பொய் சொல்ல முடியுமா? என்று எண்ணினோம்.

அந்த மவ்லவிகள் அன்று கூறியது போன்று தான் இன்றும் கூறிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஒரே வகையைச் சேர்ந்தவர்கள் தான்.

அங்கு மூன்று பேர் இருந்தனர். அவர்களிடமிருந்து பிரசுரம் வாங்கி படித்தோம். அதிலும் மிர்ஸா (நவூதுபில்லாஹ்) வுக்கு குஷ்ட நோய் பிடித்து விட்டது. அவர் நபிமார்களை இழிவுபடுத்தினார்..... போன்ற விஷயங்கள் இடம்பெற்றிருந்தன. உடனே நான் என்னுடன் வந்தவர்களிடம், சரி, நாம் நேராக காதியான் போவோம் என்றேன். மிர்ஸா சாஹிபின் நிலையை நமது கண்களால் கண்டுவிட்டு நமது ஊரிலுள்ள மிர்ஸாயிகளிடம் போய் சொல்வோம்; அந்த மிர்ஸாயிகள் ஒவ்வொரு நாளும் நம்மிடம் வந்து வாக்குவாதம் செய்கிறார்களல்லவா? என்றேன். நமது உலமாக்கள் வைக்கிற ஆட்சேபனைகளைப் பற்றியெல்லாம் அந்த மிர்ஸாயிகள் 14வது நூற்றாண்டின் உலமாக்கள் அப்படித்தான் பொய் சொல்வார்கள் என்று கூறுகிறார்கள். இப்போது நாம் கண்ணால் நேரடியாக பார்த்து விட்டு அவர்களை பொய்ப்படுத்தலாம் என்று நான் வற்புறுத்தியதன் காரணத்தால் என்னுடன் வந்தவர்கள் காதியான் வரத் தயாராகினர். அதற்கு முன் மறுக்கத்தான் செய்தனர். இவ்வாறு நாங்கள் லாஹூரிலிருந்து சவாரியை எடுத்துக் கொண்டு வந்து பட்டாலாவில் இறங்கினோம். அங்கிருந்து 1 ரூபாய்க்கு வண்டி பேசிக் கொண்டு மாலை வேளையில் காதியானில் லங்கர்கானாவை அடைந்தோம். மக்ரிப் நேரம் நெருங்கியிருந்தது. நான் அங்குள்ள சிலரிடம் மிர்ஸா சாஹிப் எங்கு தொழுவார்? அதனை கூறுங்கள்; நாங்கள் அவர் பக்கத்தில் நின்று அவரைப் பார்க்க விரும்புகிறோம் என்றோம். நாங்கள் கேட்ட அதே மனிதர் தான் என்று நினைக்கிறேன். எங்களுடனே வந்து இங்கு தான் மிர்ஸா சாஹிப் தொழுவார் என்று காட்டினார். நேரம் நெருங்கிவிட்டதால் நான் அங்கேயே உட்கார்ந்து கொண்டேன். ஹுஸூர் (அலை) அவர்கள் எனது வலது புறத்தில் வந்து நிற்பதற்கு வசதியாக நான் நின்று கொண்டேன். என்னுடன் வந்த இருவரும் எனது வலது புறம் நின்று கொண்டனர். ஹுஸூர் வீட்டிற்கு அருகிலுள்ள அப்பள்ளி மஸ்ஜித் முபாரக் என அறியப்பட்டது. அப்பள்ளி அப்போது மிகச் சிறியதாக இருந்தது. நீளத்தில் 5-6 பேர் ஒரு ஸஃப்பில் சிரமப்பட்டு நின்று தொழலாம். ஒரு ஸஃப்பில் 6 பேருக்கு அதிகமாக நிற்கவே முடியாது. சில நிமிடங்களில் மக்ரிப் பாங்கு சொல்லப்பட்டது. 2-3 மூன்று நிமிடங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் வந்தார்கள். எமது அருகில் இருந்த வாசல் வழியாகவே வெளிப்பட்டு ஹுஸூர் எங்கள் அருகில் நின்று கொண்டார்கள். மர்ஹூம் அப்துல் கரீம் சாஹிப் என் முன்னால் நின்றார்கள். இகாமத் சொல்லப்பட்டு முடிக்கப்படும் முன் ஹுஸூருடைய கால் முதல் தலை வரை பார்த்தேன். ஹுஸூர் தலைமுடி மற்றும் தாடியின் முடிவரை எனது பார்வை பட்டது. எனது உள்ளமே இன்னொரு பக்கம் மாறி விட்டது. நான் எனது உள்ளத்தில் கூறிக் கொண்டேன். யா இலாஹி! இத்தகைய மனிதனை நான் இதுவரை கண்டதில்லையே? தங்கக் கம்பிகளைப் போன்று முடிகள் இருந்தன. கண்களில் முழுமையான வெட்கம் காணப்பட்டது. கை கால்களின் அழகு உள்ளத்தை ஈர்த்தது.

இந்த மனிதனைத்தான் எமது மவ்லவிகள் பொய்யர் என்றும், நபிமார்களை இழிவுபடுத்துபவர் என்றும் கூறுகிறார்களா? என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே இமாம் அல்லாஹு அக்பர் என்று கூற தொழுகை ஆரம்பமானது. நான் தொழுகையில் இருந்தேன். ஆனால் சலாம் சொல்லும் வரை எனக்கு இது வியப்பாகவே இருந்தது. இலாஹி! எமது மவ்லவிகளின் தாடி தான் பெரியதாக இருக்கிறது. ஷரீஅத்தின் கோலத்தை அமைத்துள்ளனர். திருக்குர்ஆனை கையில் வைத்துக் கொண்டு சத்தியம் வேறு செய்கின்றனர். கடுமையான வார்த்தைகளை ஹுஸூர் (அலை) அவர்கள் விஷயத்தில் பயன்படுத்துகின்றனர். மிர்ஸாவுக்கு

(நவூதுபில்லாஹ்) குஷ்டம் பிடித்து விட்டது என்றெல்லாம் கூறுகின்றனர். இவ்வாறு உள்ளத்தில் சந்தேகத்தின ஆற்றை ஓடச் செய்கின்றனர். குர்ஆனை கையில் வைத்துக் கொண்டு அல்லாஹ்வின் பெயரால் ஒருவர் பொய் சொல்வாரா? நமது மவ்லவிகள் ஒருபோதும் பொய் சொல்லியிருக்க இயலாது என்று உள்ளம் கூறத் தொடங்கி விடுகிறது. புதிய மனிதர்களை ஏமாற்றுவதற்காக – அவர் மிர்ஸாவாக இருக்கட்டும். அல்லது வேறு யாராக இருக்கட்டும். அவர்களைப் பற்றி இவ்வாறு நம்ப வைக்கின்றனர். பிறகு ஹுஸுர் (அலை) அவர்களுடைய எளிய ஒளி பொருந்திய வடிவத்தை கண் முன்னால் காண்கிறார். இப்போது உள்ளம் கூறுகிறது. சத்தியம் செய்து அவதூறு கூறுகின்ற இம்மனிதன் பகைமையினால் பொய் மட்டும் சொல்லவில்லை. அதனை கேட்டு விட்டு மக்கள் காதியான் பக்கமே போய்விடக் கூடாது என்பதற்காகவே கூறுகின்றனர். சரி. இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கும் போதே தொழுகை முடிந்தது. ஹுஸுர் தமது ஆசனத்தில் அமர்ந்தார்கள். முஃப்தி சாஹிப் இருந்தால் என் முன்னால் வாருங்கள் என்றார்கள். முஃப்தி சாஹிப் வந்தார். பிறகு ஹுஸுர் மவ்லவி சாஹிப் எங்கே? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஆகிய ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் கடைசியிலிருந்து எழுந்து முன்னால் வந்தார்கள். ஹுஸுர் பிளேக் நோயைப் பற்றி பேசினார்கள். நாம் இம்மக்களுக்கு முதலிலேயே கூறினோம். பஞ்சாபில் மலக்குகள் கருப்பு நிறமுள்ள செடிகளை நடுவதை கண்டதாக தெரிவித்தோம். நான் அந்த மலக்குகளிடம் இது என்ன என்று கேட்ட போது பிளேக் நோய் இங்கு வரவிருக்கிறது என்று கூறினார். இதனைக் கூறியபோது மக்கள் எள்ளிநகையாடினர். பிளேக் நோய் எப்போதும் கடற்கரைப் பகுதியில் தான் வந்துள்ளது. நாட்டுக்கு உட்புறத்தில் ஒருபோதும் வந்ததில்லை. பாருங்கள். இப்போது பஞ்சாபின் சில நகரங்களில் பீறிட்டு எழுந்து விட்டது. இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் போதே இஷாவின் நேரம் வந்துவிட்டது. ஹுஸுர் இஷா தொழுது விட்டு உள்ளே போய் விட்டார்கள். நாங்களும் வந்து எங்களுக்குள் பேசிக் கொண்டோம். பிறகு தூங்கி விட்டோம். நமது மவ்லவிகள் குர்ஆனைத் தூக்கி வைத்துக் கொண்டு சத்தியம் செய்து கூறினார்கள். இங்கு வந்து பார்த்தால் அதற்கு நேர்மாறான நிலை காணப்படுகிறது. காலையில் நாங்கள் எழுந்து மவ்லவி நூருத்தீன் சாஹிபிடம் இவர் தான் மிர்ஸா சாஹிபா? அல்லது வேறு ஆளா? என்று விசாரிக்க வேண்டும். அவர் உண்மை கூறுவார் என்று முடிவெடுத்தோம். நாங்கள் அவரது அலுவலகத்திற்கு சென்றோம். மவ்லவி சாஹிப், எத்தனையோ வலிமார்கள், பட்டினி பசி, கிடைக்கிற சாதாரண உணவுகளை உண்டு விட்டு சென்று விட்டனர். மிர்ஸா சாஹிப், ஸர்தா, புலாவ் போன்ற நல்ல உணவுகளை உண்பதாக கேள்விப்படுகிறோம் என்று கேட்டோம். அதற்கு மவ்லவி சாஹிப், திருக்குர்ஆனில் பார்க்கும் போது ஸர்தாவும் புலாவும் ஹலால் ஆகத்தான் தென்படுகின்றன. இவையெல்லாம் ஹராம் என்று எங்காவது பார்த்தீர்கள் என்றால் கூறுங்கள். உடனே சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு, அந்த மவ்லவி ஒரு பிரசுரத்தை எடுத்து நீட்டினார். எங்கள் மவ்லவிமார்கள் இதனை தந்து விட்டு இறைவன் மீது சத்தியம் செய்து வேறு மிர்ஸா (நவூதுபில்லாஹ்) குஷ்டராகி விட்டார் என்று கூறினர். இங்கு வந்து பார்த்தால் இவர் தான் மிர்ஸா சாஹிப் என்று ஒருவரை காட்டினார்கள். அவரோ நல்ல ஆரோக்கியமான மனிதராக இருக்கிறார். நேற்று தொழுகையில் பார்த்தோமே அவர் தான் மிர்ஸா சாஹிபா? அல்லது வேறு யாருமா? என்று கேட்டோம். உடனே மவ்லவி சாஹிப், தனது ஜேப்பிலிருந்து அதே பிரசுரத்தை எடுத்துக் காட்டி பாருங்கள்; எமக்கும் இந்த மவ்லவிகள் அந்த பிரசுரத்தை அனுப்பி உள்ளார்கள். திருக்குர்ஆனை வைத்துக் கொண்டு பொய் கூறுகின்றனர். இதில் யாரை விரும்புகிறீர்களோ ஏற்றுக் கொள்ளலாம் என்று முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

மவ்லவிமார்கள் தொடர்ந்து இப்படித்தான் செய்கிறார்கள். இப்போது மவ்லவிகளுடன் பாகிஸ்தான் மீடியாக்களும் சேர்ந்து கொண்டன. சில நிகழ்ச்சிகளும் மவ்லவிகளின் ரோலை எடுத்துக் கொண்டிருக்கின்றன. அந்நாட்டில் உண்மைக்கும் பொய்யிற்கும் வித்தியாசமே இல்லை.

ஹஸ்ரத் நூருத்தீன் சாஹிப் சொன்னதைக் கேட்டு எனக்கு கண்ணீர் வந்து விட்டது. எனது உள்ளத்தில் சொல்லிக் கொண்டேன். பேரிழந்தவனே! இபபோதும் நீ பைஅத் செய்யாவிட்டால்! உண்மையில் இக்காலத்தின் தஜ்ஜால்கள் மவ்லவிகளே என்று முடிவு செய்தவாறு நாங்கள் மூவரும் ளுஹர் நேரத்தில் ஹுஸுரிடம் பைஅத் செய்யப் போவதாக தெரிவித்தோம். ஹுஸுர் (அலை) அவர்கள், அவசரப்பட வேண்டாம். சில நாள்கள் இங்கு தங்கிவிடுங்கள். பிறகும் மவ்லவிகள் உங்களை ஏமாற்றிவிடக் கூடாது. அதனால் நீங்கள் இன்னும் அதிக

பாவியாகி விட வாய்ப்புண்டு என்றார்கள். அப்போது நான் அழுதுகொண்டே, ஹுஸுர் இனி நான் மவ்லவிகளால் ஏமாறமாட்டேன் என்றேன். மூன்றாவது நாள் நாங்கள் மூவரும் பைஅத் செய்து விட்டு வீடு திரும்பினோம். அந்தோ பரிதாபம்! எங்கள் ஊர் திரும்பிய பிறகு மவ்லவிகள் எங்களுக்கு தந்த கஷ்டத்தை இக்கடிதத்தில் எழுத இடமில்லை. எனவே இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன் என்று அறிவிப்பில் எழுதியுள்ளார். இவ்வாறு மவ்லவிகள் குர்ஆனை உயர்த்தி சத்தியம் செய்ததனால்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நேரில் காணும் ஆவல் அவர்களுக்கு ஏற்பட்டது. மேலும் தெரிந்து கொள்ள ஆர்வம் ஏற்பட்டது. அவர்களுக்கு நேர்வழி கிடைக்க காரணமாயிற்று.

அடுத்த அறிவிப்பு **ஹஸ்ரத் மியான் அப்துல் அஸீஸ் சாஹிப்.** இவர் மியான் இமாமுத்தீன் சாஹிபுடைய மகன் ஆவார். குர்தாஸ்பூர் மாவட்டம் 1893 -ல் பைஅத் செய்தார். 1891 -ல் நான் சிக்குவானா பகுதிக்கு பணி மாற்றம் செய்யப்பட்டேன். அங்கு மியான் ஜமாலுத்தீன் சாஹிப், மியான் இமாமுத்தீன் சாஹிப், மியான் கைருத்தீன் சாஹிப் ஆகியவர்களிடம் பழக்கம் ஏற்பட்டது. அம்மக்கள் எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மஸீஹ் மற்றும் மஹ்தி என்ற வாதங்களைப் பற்றி எடுத்துரைத்தார்கள். எனது உள்ளத்தில் ஹுஸுர் (அலை) அவர்கள் பற்றி எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் பகைமையும் இருந்ததில்லை. இவர்கள் கூறியதை நான் தவறாகவும் எடுக்கவில்லை. மாறாக, இந்த மவ்லவிகள் ஏன் இவ்வாறு கூறுகின்றனர்? என்று தான் தோன்றியது. இதற்கு காரணம் எனது மூதாதையவர்கள் நல்ல மார்க்கப் பற்றுடன் இருந்ததால் மவ்லவிமார்கள் மீது மிகவும் நேசம் வைத்திருந்தனர். எனவே எனக்கும் மவ்லவிகள் மீது நல்ல அன்பு இருந்தது. எனக்கு அந்த அஹ்மதி சகோதரர்கள் கிதாபுல் பரிய்யா, இஸாலா அவ்ஹாம் போன்ற நூல்களைப் படிக்க தந்தார்கள். நான் அந்த புத்தகத்தை படிக்கும் முன் துஆ செய்தேன். இறைவனே! நான் முற்றிலும் ஒன்றும் தெரியாதவன். எது உண்மையோ அதில் எனது உள்ளத்தை நிலைநாட்டு என்று கேட்டேன். இந்த துஆ உடனே ஒப்புக் கொள்ளப்பட்டது. இஸாலா அவ்ஹாம் என்ற நூலைப் படிக்கத் தொடங்கியதும் உள்ளத்தில் ஓர் ஆறுதலும் நிம்மதியும் ஏற்பட்டது. ஹுஸுர் (அலை) அவர்களுடைய உண்மைத்தன்மையில் எந்த சந்தேகமும் எனக்கு ஏற்படவில்லை - ஈமான் அதிகரித்துக் கொண்டேதான் சென்றது. பிறகு நான் முதன்முறையாக காதியானுக்கு மியான் கைருத்தீன் சாஹிபுடன் வந்தேன். ஹுஸுரை சந்தித்தேன். எனது உள்ளத்திற்கும் நிம்மதி கிடைத்தது. இந்த மனிதரின் வடிவம் ஒரு பொய்யரின் வடிவமாக தெரியவில்லை என்று எனது உள்ளம் எனக்கு ஆறுதல் கூறியது. உடனே நான் மியான் கைருத்தீன் சாஹிபிடம் கூறினேன். இதற்கு முன்னரும் கூட நான் ஹுஸுர் (அலை) அவர்களுக்கு எதிராக மரியாதை குறைவான எந்த வார்த்தையையும் ஒருபோதும் கூறியதில்லை. அப்படியே என்னையும் அறியாமல் அப்படி சொல்லியிருந்தாலும் தவ்பா செய்கிறேன். இந்த வடிவம் பொய்யரின் வடிவமாக தெரியவில்லை. மியான் கைருத்தீன் சாஹிபுக்கும் இந்த சம்பவம் ஞாபகமிருக்கும் என்று நம்புகிறேன். நீங்கள் அவரிடமும் இதுபற்றி கேட்கலாம்.

பிறகு மெஹர் ஸவான் சாஹிப் (ரலி) அவர்களுக்கும் தெரியும். இவர் பெஹஸ்தி மக்பராவில் அடங்கப்பட்டுள்ளார். சிக்வாவில் உள்ள கண்ணியமிக்க மனிதராவார். அவருக்கு என்னுடன் நேசம் இருந்தது. எனது கொள்கையில் அவரும் ஒன்றுபட்டார். ஜமாலுத்தீன் சாஹிப், இமாமுத்தீன் சாஹிப் இருவர்களிடமும் முதலில் அங்கு வரும் போது கருத்து வேறுபாடு இருந்தபோதிலும் இப்போது என்னுடன் கருத்து உடன்பட்டார். பிறகு 1892 -ல் நானும் அவரும் ஒரே நேரத்தில் பைஅத் செய்தோம். எங்கள் இருவரின் ஆன்மீகப் பிறப்பும் இவ்வாறு ஒரே நேரத்தில் நடந்தது. நான் எனது தாயாரின் வீட்டில் பிறந்தேன். அங்குள்ளவர்களுக்கு மார்க்க அறிவு இல்லை. எனவே எனக்கு இணை வைக்கும் பெயரை வைத்து விட்டார்கள். மீரான் பக்ஷ் - மீரானின் பிச்சை என்ற எனது பெயரை மாற்றிக் கொண்டேன். ஆனால் முழுமையாக அது மக்கள் மத்தியில் மாறவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனது பெயரை அப்துல் அஸீஸ் என்று மாற்றி வைத்தார்கள். அல்லாஹ்வே! உனது மஹ்தி மஸீஹ் எனது பெயரை மாற்றி வைத்துள்ளார்கள். எனது இந்த பெயரை நிரந்தரமாக நிலைத்திருக்க செய்வாயாக என்று நான் துஆ செய்தேன். எனது முதல் பெயர் யாருக்கும் நினைவே இல்லாத அளவுக்கு அழித்து விடுவாயாக. இந்த துஆ ஒப்புக் கொள்ளப்பட்டது. அரசு ஆவணங்களில் கூட இப்போது இதுதான் எனது பெயராக உள்ளது. முந்தைய பெயர் எவருக்கும்

தெரியவில்லை. பெயர் மாறும் முன்பே நான் ஜல்ஸாக்களில் கலந்து கொண்டிருந்த போதிலும் கூட ஜமாஅத்தின் பேப்பர்கள் எதிலும் எனது முந்தைய பெயர் இடம்பெறவே இல்லை.

ஹஸ்ரத் சேக் அல்லாஹ்பக்ஷ் சாஹிப் (ரலி) அவர்கள் ஷக்ரல்பன்னு சரால் மாநிலத்தைச் சேர்ந்தவர். 1905 –ல் பைஅத் செய்தார். அவர் கூறுகிறார்: எனக்கு சிறு வயதில் எந்த மார்க்க கல்வியும் போதிக்கப்படவில்லை. சிறு வயதில் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். நான் நுழைவுத் தேர்வு எழுதும் போது எனது வயது 17. திடீரென்று நமது மார்க்கத்தைப் பற்றி தெரிய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. உடனே நான் ஒரு முல்லாவிடம் திருக்குர்ஆன் ஓதப்படித்து விட்டு நானே மொழிபெயர்ப்பை படிக்கத் தொடங்கினேன். அப்போது ஒரு மிஸ்ரி மவ்லவியுடன் ஒரு கிறித்தவப் பாதிரி செய்த வாக்குவாதம் மற்றும் அவர்களது ஆட்சேபனையும் பதிலும் அடங்கிய நூல் எப்படியோ எனக்கு கிடைத்தது. அதனை படித்து எனக்கு மிகவும் துக்கம் ஏற்பட்டது. அதில் எல்லா வகையிலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய தகுதி ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களை விட உயர்வாகவே காட்டப்பட்டிருப்பது தெரிய வந்தது. விதவிதமான சந்தேகங்கள் உள்ளத்தில் எழுந்தன. வெட்கத்தால் எனது சந்தேகங்களை எனது தந்தையிடமும் கேட்க முடியவில்லை. மவ்லவிகளிடமும் கேட்க முடியவில்லை. அந்த சந்தேகம் உள்ளத்திலேயே இருந்தது. 1905 –ன் கடைசி மாதம் வரை அவ்வாறே இருந்தது. நான் ஓர் ஊரில் வேலை பார்த்து வந்தேன் என்று கூறி அந்த ஊர் பெயரையும் எழுதியுள்ளார். சரியாக படிக்க முடியவில்லை. எவ்வாறிருப்பினும் ஓரிடத்தில் வேலை பார்க்கும் போது டாக்டர் இல்முத்தீன் சாஹிப் குஜராத்தியிடமிருந்து பதர் பத்திரிகையை வாங்கி படித்தார். படித்த போது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய வஃபாத்திற்கான ஆதாரத்தை பார்த்த போது அவரது உள்ளம் அதில் ஒன்றுபட்டது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வஃபாத் நிரூபிக்கப்பட்ட போது நான் இறைவனுக்கு நன்றி செலுத்தினேன். எந்த எதிர்பார்ப்புமின்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் சமூகத்தில் பைஅத்திற்காக கடிதம் எழுதினார். தந்தையாருக்கு விஷயம் தெரிந்த போது கோபமும் அனுதாபமும் காட்டினார். ஒரு துஆவை எனக்கு கற்றுத் தந்தார். அந்த துஆவை நான் பிறப்பதற்கு முன்பே எனது தந்தையார் செய்திருந்தாராம். அதனைப் பற்றி வீட்டில் ஓரிருமுறை என் தந்தையார் கூறியுள்ளார். முதல் குழந்தைக்கு பிறகு வீட்டில் 12 ஆண்டுகளாக குழந்தை பிறக்கவில்லை. நாங்கள் அப்போது இறைவன் முன் மிகவும் அச்சத்துடன் கீழ்க்கண்ட வார்த்தைகளில் துஆ செய்தோம். கருணையாளர்களில் எல்லாம் பெரும் கருணையாளனே! வஹ்ஹாப் ஆகிய இறைவனே! நீ ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் முதுமையில் அவர்களது துஆவைக் கேட்டது போன்று எனது குரலையும் கேட்பாயாக! எனக்கு ஆண் குழந்தையை வழங்குவாயாக. இவ்வாறு துஆ செய்ததாக எனது தந்தையார் கூறியுள்ளார். இப்போது நான் எனது தந்தைக்கு அவர் செய்த துஆவை நினைவூட்டி உங்கள் துஆ உண்மையாக ஒப்புக் கொள்ளப்பட்டது இப்போதுதான். இறைவன் என்னை அழிவிலிருந்து ஈடேற்றம் வழங்கி தன்னால் நியமிக்கப்பட்டவருக்கு அடியாராக இருக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளான். கிட்டத்தட்ட 1906 ஏப்ரலில் எனக்கு வேறு இடத்திற்கு மாறுதல் ஏற்பட்டது. அங்கு செல்வதற்கு முன் காதியான் வந்தேன். மஸ்ஜித் முபாரக்கில் ஹுஸூரின் கையில் பைஅத் செய்தேன். பைஅத் செய்த நேரத்து உணர்வுகளை சுருக்கமாக கூறுவதாக இருந்தால் அதனை இவ்வாறு கூறலாம்.

ஒரு சுதந்திர சிந்தனையுள்ள மார்க்கம் எதுவுமில்லாத ஓர் இளைஞன், நஃப்ஸே அம்மாரா (தீமையைத் தூண்டக் கூடிய ஆன்மா)வின் எல்லா கட்டுப்படாமைகளுக்கும் எதிராக யுத்தம் செய்து, காலத்தில் நியமிக்கப்பட்டவரின் முன் வருகை தந்துள்ளேன். அவரை எதிர்பார்த்து எமது கண்கள் அந்த சின்னஞ்சிறு ஜன்னலில் நிலைபெற்றுள்ளன. அந்த ஜன்னல் வழியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மஸ்ஜிதுக்குள் வருவார்கள். பள்ளியில் மிகக் குறைவான சிலர் தான் இருந்தனர். அவர்கள் அந்த தூய இருப்பை காணும் எதிர்பார்ப்பில் அமைதியாக இருந்தனர். அதே வேளையில் அந்த ஜன்னலிலிருந்து அந்த தூய அழகிய கம்பீரமான ஆண் மகன் மஸ்ஜிதுக்குள் நுழைகிறார். இங்கிருந்த இந்த இளைஞனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிகிறது. இதுவரை ஏன் அழுதேன் என்று தெரியவில்லை. முழு நிலவு இருள் நிறைந்த இரவில் வெளி வருவது போன்று அன்னாரின் வருகை இருந்தது. வந்தவுடன் எல்லா இருளும் மறைந்து வருகை தந்தவர்களின் முகத்தில் மகிழ்ச்சியின் அலை வீசியது. அப்போது அக்பர் ஷாஹ் கான் ஹுஸூரைப் புகழ்ந்து தனது கவிதை ஒன்றை வாசித்தார். ஹுஸூர் தனது திருப்தியை தெரிவித்தார்கள்.

மறுநாள் நான் அங்கிருந்து ஊர் திரும்பினேன். ஏனெனில் விடுமுறை சில நாள்களே இருந்தன. பிறகு 1907 -ல் கோடை விடுமுறையில் தந்தையார் அமிர்தசரஸ் வந்தார். அவரை காதியானுக்கு அழைத்துச் சென்றேன். ஹுஸூருடன் அறிமுகம் செய்து வைத்தேன். அவரது உடல்நிலையை எடுத்துச் சொன்னேன். பைஅத் செய்ய வைக்க முயன்றேன். ஆனால் பரிதாபம் தந்தையார் அந்த அருளிலிருந்து விலக்கப்பட்டு விட்டார். ஹுஸூர் (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடமிருந்து மருந்து வாங்கிச் செல்லுமாறு கூறினார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் எனது தந்தையாருக்கு ஆறுதல் அளிக்கும் நோக்கத்தில் தனது குழந்தைகளின் மரணம் குறித்தெல்லாம் கூறினார்கள். ஆனால் எனது தந்தைக்கு உள்ள நோயின் காரணத்தால் மிகவும் பலவீனமாகியிருந்தார்கள். அவரது கண்களிலிருந்து நீர் வழிந்தோடியது. தமது முதல் குழந்தையைப் பிரிந்த அதிர்ச்சி இருந்தது. ஆனால் பரிதாபம் மீண்டும் ஒரு முறை அல்லாஹ்வின் வீரரை (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை) சந்திக்க வாய்ப்பு கிடைக்கவில்லை. அதன் பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் வஃபாத் ஆன செய்தி தான் பத்ர் பத்திரிகை மூலம் தெரிய வந்தது.

**ஹஸ்ரத் முஹம்மது ஹுஸைன் கான் டெய்லர்.** இவர் குதா பக்ஷ் சாஹிபின் மகன் ஆவார். ஷக்னா குஜ்ரான்வாலாவைச் சேர்ந்தவர்கள். 1897 -ல் பைஅத் செய்தார். அவர் கூறுகிறார். எனக்கு சிறு வயதில் மல்யுத்தம் பார்ப்பதில் ஆர்வம் அதிகமாக இருந்தது. ஒருநாள் மல்யுத்தம் பார்த்து விட்டு வரும் போது வீட்டில் சில விருந்தாளிகள் லாட்கானே பகுதியிலிருந்து வந்திருந்தனர். அந்த ஊரின் நிலைமைகளை விசாரித்துக் கொண்டிருந்தனர். அப்போது லாட்கானேயிலிருந்து வந்தவர் கூறினார். நான் அங்கு ஒரு புதிய விஷயத்தை கேள்விப்பட்டேன். எங்கள் லாட்கானேவில் ஒரு மவ்லவி சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தார். அந்த சொற்பொழிவுக்கிடையே, அதிகமாக படித்தால் மூளை கெட்டுப் போய் விடும் என்று கூறினார். உதாரணமாக காதியானில் ஒரு மிர்ஸா சாஹிப் நான் தான் இறைவன் என்று கூறுகிறாராம் என்றார். மவ்லவி சாஹிப், அவர் ஏதாவது நூல் எழுதியுள்ளாரா? அல்லது ஏதாவது வாய்ப்பேச்சாக கூறியுள்ளாரா? என்று நான் கேட்டேன். மிர்ஸா சாஹிப் பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலை எழுதியுள்ளார்கள் என்று பதில் கூறினார். நான் சக்கரில் ஓர் அஹ்மதியை தேடிக் கண்டுபிடித்தேன். அவரது பெயர் முஹம்மது ஹயாத். சினிகோட்டைச் சேர்ந்தவர். அவரிடம் போய், உங்களிடம் பராஹீனே அஹ்மதிய்யா இருக்கிறதா? என்று கேட்டேன். இருக்கிறது என்று அவர் கூறினார். சற்று திறந்து காட்டுங்கள் என்று நான் கூறினேன். நான் இறைவன் என்று ஹஸ்ரத் சாஹிப் அதில் எழுதியிருந்தார்கள் என்பது அவரது கூற்று. புத்தகத்தை புரட்டிப் பார்த்த போது, ஹுஸூர் எழுதியுள்ளார்கள். நான் இறைவனைச் சார்ந்தவன்; இறைவன் என்னைச் சார்ந்தவன். உடனே நான் அப்பகுதியை எடுத்துக் கொண்டு அந்த நபரிடம் காட்டி, பாருங்கள்! இது சாதாரணமான கூற்றுதான். ஷய்த்தானிய சிந்தனையைக் கொண்டுள்ள ஒருவர் நமது நாட்டில் ஷய்த்தானின் பௌதீக தோற்றமாகவே ஆகி விடுகிறார். பிறகு ரஹ்மானிய சிந்தனை உள்ளவர் ரஹ்மானின் சிந்தனைகள் கொண்ட விஷயங்களைப் பார்க்கும் போது அது மட்டும் என்ன பெரிய விஷயம்? இதற்கு பதில் அளிக்கும் வகையில் அம்மனிதர் கூறினார். சகோதரரே! இவரும் மிர்ஸாயி ஆகி விட்டார்! நான் அவரிடம், சேக் சாஹிப், மிர்ஸாயி ஆவது மிக நல்ல விஷயம் என்றேன்.

எல்லாரும் சிரித்தனர். இவர் மிர்ஸாயி ஆகி விட்டார் என்றனர். பிறகு நான் எனது கடைக்குப் போய் விட்டேன். சில நாட்களுக்குப் பிறகு இரவின் கனவில் இறுதி காலத்தில் வர வேண்டிய இமாம் மஹ்தி வந்து விட்டார் என்று கூறப்பட்டது. நான் எந்த இடத்தில் வந்துள்ளார்? என்றேன். இங்கிருந்து 25 கோஸ் (சுமார் 50 மைல்) தூரத்தில் உள்ளது என்று அம்மனிதர் கூறினார்.

இவ்வாறு இன்றும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூலிலிருந்து திரித்தும் மாற்றியும் ஆதாரமாக எடுத்து வைக்கப்படுகின்றது.

இந்த பெயர் தாங்கி உலமாக்களும் சரி – தொலைக்காட்சி சேனல்களும் இவ்வேலையை செய்கின்றன. அசல் நூலை படிக்க விடுவதில்லை. பிறகு அம்மனிதர் தனது கனவு பற்றி கூறுகிறார். கனவில் நான் கேட்கிறேன். எந்தப் பகுதியில் மஹ்தி வந்துள்ளார்? உடனே அவர் கூறினார். இங்கிருந்து தெற்கே 50 மைல்

தூரத்தில் அம்மனிதர் கூறியதை வைத்து நான் புறப்பட்டேன். அங்கு மஹ்தி ஒரு குதிரையில் சவாரி செய்து கொண்டிருக்கிறார். அவருடன் 200 பேர் சவாரிகளில் வந்து கொண்டிருக்கின்றனர். நான் மஹ்தியிடம், ஹுஸூர் எனது பைஅத்தை பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறுகிறேன். இவ்வாறு கூறி விட்டு பைஅத் செய்து விட்டு ஹுஸூருடன் போகிறேன். ஹுஸூர் லாஹுரில் போய் தங்குகிறார்கள். நான் ஹுஸூர் என்னை உங்களுடன் அமர்த்திக் கொள்ளுங்கள் என்று கூற, ஹுஸூர், எவர் உலகை விட்டு தொடர்பை துண்டித்துக் கொள்கிறாரோ அவருக்கு மார்க்கத்திலிருந்து எதுவும் கிடைக்காது. உலகிலிருந்து கொண்டுதான் மனிதன் மார்க்கத்தை பெற வேண்டும் என்றார்கள். இங்கு பக்கத்தில் குஜ்ரான்வாலா என்ற நகரம் உள்ளது. அங்கு சென்று எனது தாயாரை சந்திக்க விரும்புகிறேன் என்று கூறுகிறேன். உடனே ஹுஸூர் (அலை) அதற்கு அனுமதி தருகிறார்கள். நான் அங்கு சென்று எனது இடத்தில் உள்ள ஓர் ஏணியில் நின்று கடைசி காலத்தில் வரவிருந்த இமாம் மஹ்தி வந்துவிட்டார்கள். அவர்களை பார்க்க வேண்டும் எனில், பைஅத் செய்ய வேண்டும் எனில் லாஹுருக்கு வாருங்கள் என்று கூறுகிறேன். அதற்கு பிறகு எனது கண்கள் திறந்து கொண்டன. நான் சக்கர் என்ற இடத்தில் இருந்தேன். மறுநாள் அதே சக்கர் என்ற இடத்தில் தான் இந்த கனவும் வந்தது. மறுநாள் கனவில் நான் எனது கடையில் இருக்கிறேன். இமாம் மஹ்தி வானத்தில் ஓர் உயரத்தில் இருப்பதாக காண்கிறேன். அங்கிருந்து ஒருவரிடம் இமாம் மஹ்தி கூறுகிறார்கள்:

கீழே எனது சீடர் ஒருவர் இருக்கிறார். அவரது தலையை கொண்டுவாருங்கள். உடனே அவர் என்னிடம் வந்து சொல்லவும் நான் எனது இருகாதுகளையும் பிடித்துக்கொண்டு தலையை கழற்றி கொடுத்துவிட்டேன். சிறிது நேரத்துக்குப்பிறகு ஹுஸூர் அவர்கள் இந்த தலையை அவரிடம் மீண்டும் பொருத்திவிடு. எனது கருவூலத்தில் இருந்தும் சிறிது அவருக்கு கொடுத்துவிடு என்கிறார்கள். அவர் என் தலையை என்னிடம் பொருத்திவிட்டாடர்கள். எழுந்து கலீமா படிக்கிறேன் மேலும், எனக்காக ஹுஸூர் தந்ததை என்னிடம் தாருங்கள் என்கிறேன். அவர் தர மறுத்துவிட்டார். இவ்வாறு அவர் கண்ட கனவை கூறுகிறார். இப்படியே அந்த இரவு கழிந்தது. மறுநாள் இரவு 10-11 மணிவாக்கில் எனது உடல் ஏதோ ஒன்றில் அழுத்தப்பட்டிருப்பதாக உணர்கின்றேன். நான் தூங்குகிறேனா? விழித்துக் கொண்டிருக்கிறேனா என்றும் தெரியவில்லை. அதற்குள் என்னிடம் இமாம் மஹ்தி (அலை) என் அருகில் வருகிறார்கள்; என்னிடம் கூறுகிறார்கள். என்ன நடந்தது? அவர் உமக்கு தரவில்லையா? பரவாயில்லை. என்னிடம் நிறைய இருக்கிறது. சரி கையை நீட்டுங்கள் என்றார்கள். நான் கையை நீட்டியதும் கையில் ஒன்றை வைத்தார்கள். அதனை நான் என் வாயில் போட்டுக் கொண்டேன். இவ்வாறு ஹுஸூரிடம் பைஅத் செய்தேன்.

அதுபோன்று ஒருநாள் நான் காதியான் வரும்போது இரவு 11 மணிக்கு பட்டாலா வந்தேன். அங்கு இரவு தங்க ஓரிடமும் இல்லை. நான் பயணிகள் விடுதி முன் உட்கார்ந்தேன். யா அல்லாஹ் நான் எங்கு போவேன்? மக்கள் வண்டியில் இருந்து இறங்கியதும் தத்தமது இடத்துக்கு போய்விட்டனர். திடீரென்று ஒருவர் வெளிப்பட்டார். உங்களுக்கு எங்கே போக வேண்டும்? என்றார்.

அல்லாஹ் இத்தகைய மனிதர்களுக்கு இவ்வாறு உதவிகள் செய்கிறான். தமது கதையை அவர் மேலே சொல்கிறார்:

நான் அந்த நபரிடம் கடைசிகாலத்தில் இமாம் மஹ்தியை சந்திப்பதற்காக போகிறேன். சக்கரில் ஹுஸைன் பக்ஷ் உடைய வீட்டு வாசலில் வந்து கதவை தட்டினார். அவரை மகிழ்ச்சியுடன் சந்தித்தேன். இரவு அங்கு தங்கிவிட்டு காலையில் காதியானுக்கு புறப்பட்டேன். உடனே அம்மனிதர் நீங்கள் என்னிடத்தில் உணவு உண்ணாமல் போக விடமாட்டேன் என்று கூறினார். பஜாருக்கு சென்று காய்கறிகள் வாங்கிவந்து சமைத்து ரொட்டி உண்ணச் செய்தார். பிறகு ஒரு வண்டி அமர்த்தி என்னை அனுப்புவதற்காக வெளியில் வந்தார். வெளியில் ஒரு வண்டி நின்றது. காதியான் செல்வதற்காக அதில் ஏறி அமர்ந்தேன். ஜட்கா வண்டிகாரர் ஏற்கனவே இருவரை அதில் அமர்த்தியிருந்தார். நான் 3வது ஆக அமர்ந்ததும் குதிரையை ஓட்டத் தொடங்கினான். வண்டியில் இருந்த ஒருவருக்கு நீண்ட தாடி இருந்தது. அதில் மருதாணி பூசியிருந்தார். என்னிடம் நீங்கள் எங்குபோக வேண்டும்? என்று கேட்டார். ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களை தரிசிக்க போகிறேன் என்று கூறினேன். அவர் மக்கள் ஏன்தான் இங்கு வருகிறார்கள்? என்று தெரியவில்லை. மக்கள் மூளை என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. பட்டாலாவில் இருந்து காதியான் வரை இப்படியே

பேசிக்கொண்டு வந்தார். நான் இஸ்திக்ஃபாரும், லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ் என ஓதிக் கொண்டே வந்தேன். காதியானில் இறங்கியதும் அம்மனிதர் முன்னே செல்ல நான் பின்னால் சென்றேன். மஸ்ஜித் முபாரக்குக்கு கீழே போஸ்ட் பாக்ஸ் பொருத்தப்பட்ட இடத்தில் அங்கு ஒருவரை பார்த்தேன். அவர் உங்களுக்கு யாரைப் பார்க்க வேண்டும் என்றார்? ஹஸ்ரத் நூருத்தீன் ஸாஹிபை பார்க்க வேண்டும் என்றேன். நான் அந்த உள்ளூர்காரரிடம், எனக்கு முன்னால் போகிறாரே அவர் யார்? என்று கேட்டேன். அவர் மிர்ஸா இமாமுத்தின் என்று அம்மனிதர் கூறினார். மிர்ஸா இமாமுத்தின் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது ( அலை) அவர்கள் மீது ஏச்சுப் பேச்சுக்களை வெளிப்படுத்தக் கூடியவர். பிறகு நான் மவ்லவி சாஹிபிடம் சென்றேன். டாக்டர் ஹஸன் அலி அங்கு வந்திருந்தார். அவரும் ஆரம்ப கால அஹ்மதியாவார். மவ்லவி சாஹிப் உட்காருமாறு சைகை செய்தார்கள். அமர்ந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு என்னிடம் ஒருவர் வந்தார். ஹஸ்ரத் ஸாஹிப் மஸ்ஜித்துக்கு வந்துள்ளார்கள் என்று கூறினார்கள். மஸ்ஜித் முபாரக்கில் மிஹ்ராபுக்கு அருகில் ஒரு புறம் இமாம் மஹ்தி (அலை)-ம் இன்னொரு புறம், மவ்லவி நூருத்தின் ஸாஹிப்-ம் அமர்ந்திருந்தார்கள். என்னைப்பற்றி ஹுஸூரிடம் அறிமுகம் செய்தார்கள். ஹுஸூர், இவர் டாக்டர் ஹஸன் அலி உடைய மாமி மகன். தங்களிடம் பைஅத் செய்ய வந்துள்ளார் என்றார்கள். பிறகு நான் ஹுஸூரிடம் பைஅத் செய்தேன். எனது சிறுவயது நிகழ்ச்சிகளைக் கூறினேன். ஹுஸூர் கேட்டுக்கொண்டிருந்தார்கள். எனது தம்பி அஹ்மதியாக வேண்டும். அவனுக்காக துஆ செய்யுங்கள் என்று கூறினேன். அவனுக்கு பத்ர் பத்திரிகையும் அனுப்பி வைத்துள்ளேன். ஹுஸூர் (அலை) அவர்களுடைய நூல்கள் எனக்கு கிடைத்தவற்றை அவரிடமும் கொடுத்துள்ளேன். அவர் அதில் கை வைப்பதில்லை. இதில் சூனியம் வைக்கப்பட்டுள்ளது. இதை படித்தவர் மிர்ஸாயி ஆகி விடுகிறார் என்று கூறுகிறார். ஹுஸூர் கூறினார்கள்: உங்கள் எண்ணம் தூய்மையானது. அல்லாஹ் பெரும் வெற்றியை உங்களுக்கு வழங்குவான். பிறகு ஹுஸூர் பார்வையை உயர்த்தி என்னைப் பார்த்தார்கள். எனது ஒரு கண் சிவந்து போய் இருந்தது. எப்போதிலிருந்து உமது கண் இப்படி இருக்கிறது? என்று கேட்டார்கள். ஹுஸூர்! எனது சிறு வயதிலிருந்து எண் கண்கள் இப்படித்தான் சரியில்லாமல் இருக்கிறது என்றேன்.

ஒரு முறை கோமரி மலைக்கு சென்றேன். அங்கு கொஞ்சம் இந்தப் பிரச்சனையில்லாமல் இருந்தது. அங்கிருந்து வந்த பிறகு மீண்டும் கண் பிரச்சனை ஏற்பட்டு விட்டது என்றேன். உமது பணி கோமரியில் நன்கு நடக்கலாம். நீங்கள் அங்கு சென்று வேலை செய்யுங்கள் என்றார்கள். ஹுஸூர் இப்போது நான் சக்கர்கில் வேலை செய்கிறேன். தொழிலாளிகளுக்கு ஓரிடத்தை விட்டு இன்னொரு இடம் போனால் சிரமம் என்றேன். ஏனெனில் சக்கர் - கோமரி இடைய தூரம் 600-700 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அல்லாஹ் உங்களுக்கு நிவாரணம் தருவான் என்றார்கள். அந்த உடனேயே ஒரு சுகம் ஏற்பட்டதாக உணர்ந்தேன். பிறகு மஸ்ஜிதிற்கு கீழ் வந்து மவ்லவி சாஹிப் உடன் வந்து அமர்ந்து கொண்டேன். மவ்லவி சாஹிப் என்னிடம் ஹுஸூரிடம் உமது கண்களை தடவுமாறு சொல் என்று சைகை காட்டினார்கள். முற்றிலும் சுகம் கிடைத்து விட்டது என்று நான் அவர்களிடம் கூறிவிட்டேன். அதன் பிறகு ஹுஸூர் லாஹூர் சென்றார்கள்.

அடுத்த அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: ஒரு முறை ஹுஸூரை சந்திக்க டெபுடி போலீஸ் கமிஷனர் மற்றும் போலீஸ்கள் கப்தான் பகுதிக்கு வந்தனர். தங்களை சந்திக்க வந்துள்ளோம் என்றார்கள். எனக்கு உடல்நலம் சரியில்லை. ஒரு நிமிடங்கள் சந்திக்கலாம் என்று ஹுஸூர் கூறினார்கள். வாசலில் நின்றவாறு ஹுஸூர் அவர்களை சந்தித்தார்கள். காவல்துறையினர், ஹுஸூரிடம் இரவில் உங்கள் மீது கல் வீசப்பட்டதாக எங்களுக்கு ஒரு ரிப்போர்ட் வந்துள்ளது. நீங்கள் விரும்பினால் பாதுகாப்பிற்காக காவல்துறையினரிடம் சொல்லலாம்.

எம்மை அல்லாஹ் பாதுகாக்கிறான். நீங்கள் எவ்வளவு பாதுகாப்பு தருவது பொருத்தம் என்று நினைக்கின்றீர்களோ அந்த அளவுக்கு உங்கள் கடமையை செய்யலாம் என்று ஹுஸூர் கூறினார்கள். அதற்கு பிறகு அந்த காவல்துறையினர் சென்று விட்டனர்.

மேலும் அவர் கூறினார்: ஒருநாள் ஹுஸூர் பகலில் 10.00 மணி அளவில் வந்தார்கள். தமது கடிகாரத்தை சரிசெய்வதற்காக வந்தார்கள். கைக்குட்டையில் இருந்து கடிகாரத்தை எடுத்து சரி செய்து விட்டு

மேலே போய் விட்டார்கள். பிறகு நான் இன்னொரு முறை காதியான் சென்றேன். அப்போது ஒருவர் ஹுஸூரிடம் ஒரு கடிதத்தை வாசித்துக் காட்டிக் கொண்டிருந்தார். ஸியால்கோட்டில் இருந்து ஓர் அஹ்மதி அக்கடிதத்தை எழுதியிருந்தார். அதில் எனது உறவினர் ஒருவர் மண ஊர்வலத்தில் முரசும், மங்களப் பொருட்களும் கொண்டு வர வேண்டும் என்று கூறுகிறார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: முரசு கொட்டுவது அறிவிப்பதற்காக கொட்டப்படுகிறது. அதில் பாவம் இல்லை. ஆனால் மங்களப் பொருள்கள், பூஜைப் பொருள்கள் எல்லாம் மக்ரூஹ் – விரும்பத்தகாதது ஆகும். அதனை விட்டுவிடுங்கள்.

பாபு முஹம்மத் ரஷீதுக்கு அஹ்மதிய்யத்தின் பக்கம் கவனம் திரும்பியது. அதன் பிறகு என்னுடன் 4 பேர் காதியானுக்கு பைஅத் செய்வதற்காக வந்தனர். பாபு முஹம்மத் ரஷீத், மவ்லவி மஹ்பூப் ஆலம், மிஸ்ரி இல்மித்தீன் நான்காவது நபரது பெயர் ஞாபகம் இல்லை. 4 பேரையும் பைஅத் செய்வதற்காக காதியான் அழைத்து வந்தேன்.

இன்னொரு விநோதமான சம்பவமும் எழுதியுள்ளார். ஒருமுறை நான் வந்த போது ஹுஸூர் ஜன்னல் வழியாக மஸ்ஜிதிற்குள் வந்தார்கள். மக்கள் வரவேற்கும் பொருட்டு எழுந்து நின்றார்கள. ஒரு பட்டான் அதில் இருந்தார். அவர் நோயுற்றிருந்தார். எழ சற்று நேரமாகி விட்டது. அவர் தனது காலை நீட்டியபோது அவரது பாதத்தின் மீது ஹுஸூர் காலில் பட்டது. அத்துடன் அவரது கால் வலி குணமாகி விட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு ஹுஸூர் உள்ளே சென்ற போது அம்மனிதர், ஹுஸூர், எனது இந்த காலிலும் தங்கள் பாதத்தை வையுங்கள் என்றார். ஹுஸூர் தங்கள் பாதத்தை வைத்து விட்டு சென்றார்கள். சிறிது நேரம் கழித்து அவர் மவ்லவி நூருத்தீன் சாஹிபிடம் கூறினார். நான் ஆறு மாதமாக உங்களிடம் சிகிச்சை பெற்று வருகிறேன். ஆனால் சுகம் கிடைக்கவில்லை. இன்று ஹுஸூர் ஜன்னல் வழியாக பள்ளிக்குள் வரும் போது எனது பாதத்தின் மீது அவர்களது பாதம் பட்டது. அதோடு எனது எல்லா வலியும் போய் விட்டதாக தெரிகிறது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பதிலாக கூறினார்கள். சகோதரரே! அவர் அல்லாஹ்வின் ரஸூல் ஆவார். நான் சாதாரண வைத்தியன். உங்களுக்கு மருந்து தந்தேன் என்றார்கள்.

ஒருமுறை ஹுஸூர் மஸ்ஜிதில் அமர்ந்திருந்தார்கள். ஏதோ அவசிய தேவைக்காக உள்ளே சென்றார்கள். அருகில் அவர்களது சத்ரி – நெஞ்சை மறைக்கும் ஆடை கிடந்தது. அதனை எடுத்து தமது தோலில் இட்டவாறு உள்ளே சென்றார்கள். 2–3 நிமிடங்களுக்குப் பிறகு திரும்பி வரும் போது தோளிலிருந்து எடுத்து அதனை அதே இடத்தில் வைத்தார்கள். ஹுஸுர் இங்கு அன்னியர்கள் யாருமில்லை. தாங்களோ ஓரிரு நிமிடங்களில் திரும்பி விட்டீர்கள். பிறகு நெஞ்சை மறைக்கும் ஆடையை ஏன் உங்கள் தோளில் போட்டுக் கொண்டு சென்றீர்கள்?

ஹுஸூர் கூறினார்கள்: எவருக்கும் பாவம் செய்ய வாய்ப்பு வழங்கக் கூடாது. இது அங்கிருந்த மக்களை குறித்து கூறியதில்லை. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தர்பிய்யத் கொடுக்கும் முறையாகும். ஒருவருக்கு வாய்ப்பளித்து விட்டு சந்தேகத்தில் விழுவதை விட உங்கள் பொருளை நீங்கள் எடுத்துக் கொண்டு போய் விட வேண்டும் என்பதே அதில் கூறப்பட்ட நியதியாகும். அறிவிப்புகள் கணிசமாக இருக்கின்றன. இறுதியில் ஒரு அறிவிப்பை கூறுகிறேன்.

ஹஸ்ரத் சேக் முஹம்மத் இஸ்மாயில் சாஹிப் (ரலி) அவர்களுடைய அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. இவர் சாரன்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். 1894 –ல் பைஅத் செய்தார். அவர் எழுதுகிறார்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இக்காலத்தில் மவ்லவிகள் சூஃபிகள் மீது பரிதாபப்பட்டுள்ளார்கள். உண்மையிலிருந்து மக்களை திருப்புவதில் முன்னரைவிட இவர்கள் அதிகமாக துடிப்புடன் உள்ளனர். அல்லாஹ்வின் அடியார்கள் நேர்வழிக்கு வர விடாமல் அவ்வாறு செய்கின்றனர்.

நான் உனது தப்லீகை உலகின் எல்லை வரை எட்ட வைப்பேன். உன்னை செயலாற்றுவனாக உமது இலட்சத்தை எய்தாவராக ஆக்கிவிட மாட்டேன் என்று இறைவன் எனக்கு ஆறுதல் தரா விட்டால் இந்த மவ்லவிகளின் பிதற்றலால் என்ன கஷ்டம் கொடுத்திருப்பார்கள் என்று தெரியவில்லை.

இந்த மக்களின் உயர்வுக்கும் மேல் நேர்வழிக்காகவும் இறைவன் முன் அழுகிறேன். என்மீது உபகாரம் செய்தவனே! அரசனே! இம்மக்களின் மீது கருணை காட்டுவாயாக! இவர்களின் உள்ளத்து அழுக்குகளை அகற்றுவாயாக! இவர்கள் வழிகேட்டின் பள்ளத்தில் விழுவதில் இருந்து காப்பாற்றுவாயாக! நான் இறை சன்னிதானத்தில் மீண்டும் விழுகிறேன். என் இறைவனே! உன்னிடம் இவர்களுக்காக நான் என்னென்ன வேண்டுகிறேன் என்று இவர்களுக்கு தெரியாது. அல்லாஹ்! அல்லாஹ்! என்று ஹுஸூர் இந்த வார்த்தைகளை தமது வாயிலிருந்து கூறிய அக்காட்சி அப்படியே நிழற்படமாக பதிந்து விட்டது. அல்லாஹ்வின் அடியார்கள் மீது எத்தகைய நலம் நாட்டம் அவர்களுக்கு இருந்தது. அன்னார் ஒரு தூய இருப்பு என்பது சரிதான். இத்தகைய தூயவர்களை அல்லாஹ் தனது அடியார்களின் நலனுக்காக அனுப்புகிறான். இவர்கள் தனது அடியார்கள் மீது உண்மையான வலி உள்ளவர்களாகவும் நலம் நாடுபவராகவும் இருக்கிறார்கள். தமது அடியார்களுக்காக இவர்கள் நன்மையை நாடும் அளவுக்கு இவர்களது பெற்றோர்கள் கூட நலம் நாட முடியாது. நான் அவர்களது இந்த துக்கம் மிகுந்த வார்த்தைகளை கேட்டுள்ளேன். எனவே அவர்களின் துயரம் எவ்வாறு இருந்திருக்கும் என்று என்னால் கணிக்க முடியும்.

ஹஸ்ரத் சேக் முஹம்மத் இஸ்மாயில் (ரலி) அவர்கள் இப்னு சேக் மஸித்தா சாஹிப் சக்னா சர்வாவா. சாரன்பூர் மாவட்டம். இதுவும் அதே அறிவிப்பாளர்தான். அவர் கூறுகிறார்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது தூய்மையாக்கும் ஆற்றலால் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தார். இறைவன் மீது ஓர் உறுதியை ஏற்படுத்தியிருந்தார்கள். எந்த அளவுக்கு எனில் எவர் மீது கொண்ட பயத்தாலும் எந்த அசிங்கங்களையும் செய்யமாட்டார்கள். உண்மையை சொல்வதை விடமாட்டார்கள். தீய ஒழுக்கங்களிலிருந்து பாதுகாப்பாக இருந்தார். உயர் நல்லொழுக்கங்களை கொண்டிருந்தனர். எமது இறைவன் எங்களுடன் இருக்கிறான் என்று பெருமிதம் கொண்டனர். நமது எதிரிகள் தோல்வியடைவார்கள் என்று உறுதி கொண்டிருந்தனர். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நண்பர்கள் இறைவனுக்கு எப்போதும் நன்றி சொல்பவர்களாக இருந்தனர். இறைவனின் அருகாமை அவர்களுக்கு கிடைத்து வந்தது. இறைவன்மீது பொறுப்புச் சாட்டாமலும் உண்மையை மறைப்பவர்களும் அவர்களின் நண்பர்களில் எவரும் இல்லை. எவருக்கும் பயப்படமாட்டார்கள். அவர்களது அஃமாலே சாலிஹாவின் நிலையை கூறுவதாயின் அவர்களின் உள்ளம் இறை நேசத்தால் மூழ்கியிருந்தது. எந்த பணி செய்தாலும் அல்லாஹ்வுக்காகவே செய்தனர். காட்டுதலிலிருந்து எச்சரிக்கையாக இருந்தனர். காட்டுதலை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அபாயகரமான நோய் என்று கூறியுள்ளார்கள் அதனால் மனிதன் முனாஃபிக் ஆகி விடுகிறான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கண்களின் திரையை உயர்த்தப்பட்டதை கண்டதில்லை. எப்போதும் அவர்களின் கண்களின் பர்தா திரையிட்டவாறே இருந்தது. அவர்களின் கண்களில் வெட்கம் காணப்பட்டது. ஏதாவது ஓர் அல்லாஹ்வின் எதிரியை அல்லது நபி (ஸல்) அவர்களின் எதிரியைப் பற்றி பேச்சு வந்தால் அவர்களின் கண்களின் திரை முற்றிலும் உயர்ந்து விடும். அதுவன்றி அவர்களின் கண்கள் திரைக்குள் மறைந்தே இருந்தது. எத்துணை நாணமிக்கவை அவர்களின் கண்கள்!

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது எத்தனை அன்பு எனில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சிறப்புகள் பற்றி பேசும் போது, அந்த தூய ரஸூல் (ஸல்) அவர்கள் உலகில் வரவிட்டால் நேர்வழியின் எந்த அம்சமும் எஞ்சியிருக்காது. வழிகேடு வழிகேடே நிறைந்திருக்கும் என்று கூறுவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தீய ஒழுக்கங்களிலிருந்து விலகுமாறு ஜமாஅத்திற்கு எப்போதும் கவனமூட்டி வந்தார். நீங்கள் அல்லாஹ்வை வெளிப்படுத்தக் காட்டுபவராக ஆகுங்கள் என்று கூறுவார்கள். உயர் நல்லொழுக்கங்களை மேற்கொள்ளுங்கள் என்று கூறுவார்கள். அல்லாஹ் உங்களை தனது அன்பிற்குரியவர் ஆக்க வேண்டும் என்று கூறுவார்கள். மேலும் நாம் எமது இறைவனை தாயை விட அதிகமாக அன்பு செலுத்துபவர்களாக கண்டோம் என்று கூறுவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நல்லொழுக்கம் பற்றி ஒருவர் ஆய்வு செய்தால் ஒருபோதும் மறுக்க முடியாது. அவர்களின் அன்பில் மூழ்கிவிடுவார். அவர்களின் பாதத்தில் வீழ்ந்து விடுவார். அவர்களின் பிரிவைக்கூட அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நல்லொழுக்கமாகும்.

மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தப்பெண்ணத்திலிருந்து விலகுவதற்கு அதிகமாக அறிவுரை கூறுவார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தப்பெண்ணம் கொள்பவர் ஈமானின் ஒளியிலிருந்து ஒளியைப் பெற இயலாது. ஏனெனில் தப்பெண்ணம் அபாயகரமான தீயொழுக்கம் ஆகும். அது இறைவனின் மீது நம்பிக்கை இழக்கச் செய்து விடுகிறது. எனவே நமது ஜமாஅத் தப்பெண்ணத்திலிருந்து தப்பிக்க வேண்டும். தப்பெண்ணம் கொள்பவர் இறைவனது தூய ஜமாஅத்தில் இருக்க முடியாது. இதுவே இறை இயக்கங்களை கண்டறியும் வழியாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் தமது ஜமாஅத்திற்கு இந்த அறிவுரையைக் கூறியுள்ளார்கள். திருக்குர்ஆனே இறைஞானம் பெறும் வழியாகும். அதில் கூறப்பட்டவையே அஃமாலே சாலிஹாவாகும். ஏனெனில் திருக்குர்ஆன் மட்டுமே மனிதனுக்கு உலகிலும் மறுமையிலும் உண்மையை பிரதிபலிக்கும் செயல்களை கூறியுள்ளது.

நான் உண்மையாகவே கூறுகிறேன். இதுவே இறுதி வேதமாகும். இதனை குறித்தே உலகிலுள்ள எல்லா நல்லடியார்களின் நாவுகளும் உண்மைப்படுத்தியுள்ளன. நமது தூய ஜமாஅத் அதனை அமல்படுத்த வேண்டும். அல்லாஹ் இந்த சஹாபாக்களின் தகுதியை உயர்த்துவானாக. அவர்கள்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய காலத்தின் நிகழ்வுகளை நம் வரை கொண்டு சேர்த்துள்ளார்கள். நமது ஈமானை அதிகரிக்க காரணமாகியுள்ளார்கள். நமக்கும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மிஷனை திரும்ப உயிர்ப்பிப்பதற்கு எல்லா தியாகமும் செய்ய வாய்ப்பினை வழங்குவானாக. நம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு இஸ்லாமிய போதனையை நடைமுறைப்படுத்தும் மக்களாக ஆக்குவானாக. சஹாபாக்கள் நம்மிடம் எடுத்து வைத்துள்ள அந்த முன்மாதிரிகளை நடைமுறைப்படுத்தும் மக்களாக ஆக்குவானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 16.07.2010

Translated by : Muallim M. NIZAMUDEEN
Reviewed by : Moulvi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456